TNNG020060842022

உதவி அமர்வு / தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**முன்னிலை. திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,**

உதவி அமர்வு நீதிபதி/ தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம்.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ம் தேதி புதன்கிழமை

(திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 10 ம் நாள்)

**அமர்வு வழக்கு எண்.141/2022**

( நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாகப்பட்டினம்.

முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.39/2022)

| | | |
|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளர் பெயர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கீழ்வேளூர் காவல் நிலையம்<br>குற்ற எண்.1036/2021. |
| 2 | எதிரி | இங்கர்சால், ஆ/வ. 26/2021,<br>த/பெ. தமிழ்செல்வன்,<br>காலனித்தெரு, மஞ்சவாடி,<br>கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம். |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 18.09.2021 |
| 4 | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தின் Crl.M.P. No.2035/2022 ல் கடந்த 20.04.2022 ஆம் தேதி குவிமுச. பிரிவு 167(2)ன் கீழ் வழங்கப்பட்ட பிணை உத்தரவுபடி பிணையில் சென்றுள்ளார்.<br>**பின்னிட்டு இவ்வழக்கில் ஆஜராகாததால், கடந்த 07.09.2022 ஆம் தேதி பிணையில்விடா** |

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:55:29 +0530

| | | |
|---|---|---|
| | | **பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கடந்த 01.06.2026 ஆம் தேதி ஆஜரான எதிரி இந்நீதிமன்ற உத்தரவுபடி தற்போது நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டு வருகிறார்.** |
| 5 | இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் முதன்மை பதிவேட்டு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 09.05.2022 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, PRC.No.39/2022 ஆக கடந்த 11.05.2026 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவரால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| 6 | அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினத்திற்கு நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் இருந்து வழக்கு அனுப்பி வைக்கப்பட்ட உத்தரவு நாள் | 07.07.2022 |
| 7 | கு.வி.மு.ச.பிரிவு 228 ன் கீழ் வனையப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள் | 23.06.2026 |
| 8 | வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் | எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act 1959 ன் கீழ். |
| 9 | எதிரியின் கோரிக்கை | பொய் வழக்கு. குற்றவாளி இல்லை. |
| 10 | இவ்வழக்கில் குவிமுச. பிரிவு 317 ன் கீழான மனுக்கள் நீங்கலாக இதர தாக்கல் செய்யப்பட்ட மனுக்கல் | அரசுத்தரப்பில் கீழ்வேளூர் காவல் நிலையத்தில், தற்போதைய காவல் உதவி ஆய்வாளர் திரு. இரணியன் என்பவரை |

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:55:37 +0530

<table>
<tr><td></td><td>மற்றும் அவைகள் மீதான உத்தரவு, அது சம்பந்தமான மேல் முறையீட்டு உத்தரவு</td><td colspan="3">அழைத்து அரசுத்தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய, கடந்த 23.06.2026 ஆம் தேதி தாக்கல் செய்த மனுவானது, அன்றே Crl.M.P.No.435/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அதன் பேரில் மேல்முறையீடு எதுவும் இல்லை.</td></tr>
<tr><td rowspan="3">11</td><td rowspan="3">இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் நாள் விபரம்</td><td>அரசு தரப்பு/ எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>முதல் விசாரணை நாள்</td><td>குறுக்கு விசாரணை நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>23.06.2026</td><td>23.06.2026</td></tr>
<tr><td>12</td><td>நீதிமன்றத்தின் முடிவு</td><td colspan="3">முடிவில், இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>13</td><td>தீர்ப்புரை</td><td colspan="3">இவ்வழக்கு எதிரியை இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழான குற்றச்சாட்டுக்களிலிருந்து கு.வி.மு.ச. பிரிவு 235(i)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>14</td><td>வழக்கு சொத்து குறித்த உத்தரவு</td><td colspan="3">இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்தில் CP.No.235/2021 ஆக ஆஜர் செய்யப்பட்டு, தற்பொழுது இந்த நீதிமன்றத்தில் CP.No.22/2025 ஆக எண்ணிடப்பட்ட சாபொ.1 ஆன சுமார் 60 செ.மீ. நீளமுள்ள அருவாள் ஒன்றை மேல் முறையீடு அல்லது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. |

இந்த அமர்வு வழக்கு இந்நீதிமன்றம் முன்பாக இன்று 24.06.2026 ஆம் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றத்துறை அரசு வழக்கறிஞர் திரு. S. சரவணன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. அம்பேத்கர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில், இன்றே இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கிடும் ...

## <u>தீர்ப்புரை</u>

கீழ்வேளூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர், இவ்வழக்கின் எதிரி இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act 1959 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக சொல்லி, கீழ்வேளூர் காவல் நிலைய குற்ற எண்.1036/2021 என்ற வழக்கில் குற்ற அறிக்கையினை, கடந்த 09.05.2022 ஆம் தேதி நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், நாகப்பட்டினத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நீதிமன்றத்தில், மேற்படி வழக்கு PRC No.39/2022 ஆக, கடந்த 11.09.2022 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 07.07.2022 ஆம் தேதி மேற்படி நீதித்துறை நடுவரின் உத்தரவுபடி, விசாரணைக்காக இவ்வழக்கு மாண்புமிகு நாகப்பட்டினம்

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:55:51 +0530

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு அமர்வு வழக்கு எண்.141/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 21.07.2022 ஆம் தேதிய உத்தரவுப்படி, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இவ்வழக்கு கோப்பு இந்நீதிமன்றத்தால் கடந்த 25.07.2022 ஆம் தேதி பெறப்பட்டது.

2. கீழ்வேளூர் காவல் நிலைய குற்ற எண்.1036/2021 ல், இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் ஸ்டாலின் என்பவரின் அப்பாவான பன்னீர்செல்வம், இவ்வழக்கின் எதிரி மீது ஏற்கனவே கீழ்வேளூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் விரோதம் கொண்ட இவ்வழக்கின் எதிரி, அதனை மனதில் வைத்துக்கொண்டு, கடந்த 17.09.2021 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில், கீழ்வேளூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஓர்குடி ஆற்றுப்பாலத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த இவ்வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரரை மேற்கொண்டு செல்லவிடாமல் அவரிடம் கலகம் செய்ய வேண்டும் என்ற குற்றமுறு எண்ணத்தில் சட்ட முரணாக தடுத்து, நிகழ்நிலைப் புகார்தாரரைப் பார்த்து டேய் புண்டாமவனே உங்கப்பன்தானடா என் மேல புகார் கொடுத்தான். அவனால என்னை என்ன புடுங்க முடிஞ்சுது என்று பிறர் அருவருக்கும்படியான காமக்குரோதமான வார்த்தைகளால் பொது இடத்தில் வைத்து திட்டி, கொலை செய்ய பயன்படுத்தக்கூடிய கொடிய ஆயுதமான அருவாளை பயன்படுத்தி மேற்படி நிகழ்நிலை புகார்தாரருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். எனவே, இவ்வழக்கின் எதிரி இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று கூறப்பட்டுள்ளது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:55:58 +0530

3. காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்ட இவ்வழக்கு எதிரியிடம், இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ளப்பட்டது. பின்னர் அரசு தரப்பு வழக்கறிஞர் மூலம் இவ்வழக்குப் பற்றிய விபரமும், மேற்படி எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களும் கேட்டறியப்பட்டது. பின்னர் இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அதனடிப்படையில், கடந்த 23.06.2026 ஆம் தேதி, இவ்வழக்கு எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து வினாவ போதிய முதல்தோற்ற ஆதாரங்கள் இருந்தமையால், அவ்வாறே குற்றச்சாட்டுக்கள் வனைந்து தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினாவப்பட்டது. அப்போது இவ்வழக்கின் எதிரி, மேற்படி குற்றச்சாட்டுக்களை மறுத்து, குற்றவாளி இல்லையென சொல்லி, பொய் வழக்கு என கூறி வழக்கு விசாரணைக்கு வேண்டினார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில், அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் 2 ஆகிய சாட்சியங்களை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் 8 வரையிலான சான்றாவணங்களும், சாபொ.1 ஆன அருவாளும் குறியீடு செய்யப்பட்டது.

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:04 +0530

5. **அரசு தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் மூலம் முன்வைக்கப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு :**

5 (1). இவ்வழக்கின் அசா.1 திரு. ஸ்டாலின் என்பவரின் அப்பாவான பன்னீர்செல்வம், இவ்வழக்கின் எதிரி மீது ஏற்கனவே கீழ்வேளூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்துள்ளார். அதனால் விரோதம் கொண்ட இவ்வழக்கின் எதிரி, அதனை மனதில் வைத்துக்கொண்டு, கடந்த 17.09.2021 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில், கீழ்வேளூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஓர்குடி ஆற்றுப்பாலத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த, அசா.1 றை மேற்கொண்டு செல்லவிடாமல் அவரிடம் கலகம் செய்ய வேண்டும் என்ற குற்றமுறு எண்ணத்தில் சட்ட முரணாக தடுத்து நிறுத்தியுள்ளார். அசா.1 றை பார்த்து டேய் புண்டாமவனே உங்கப்பன்தானடா என் மேல புகார் கொடுத்தான், அவனால என்னை என்ன புடுங்க முடிஞ்சுது என்று பிறர் அருவருக்கும்படியான காமக்குரோதமான வார்த்தைகளால் பொது இடத்தில் வைத்து திட்டியுள்ளார். மேலும் இவ்வழக்கின் எதிரி கொலை செய்ய பயன்படுத்தக்கூடிய கொடிய ஆயுதமான அருவாளை பயன்படுத்தி அசா.1 றுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

5 (2). அதுசம்பந்தமாக கடந்த 17.09.2021 ஆம் தேதி மாலை 05.30 மணியளவில், கீழ்வேளூர் காவல் நிலையத்தின் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்த திரு. அசோக்குமார் என்பவரிடம் அசா.1 நிலையம் ஆஜராகி அசாஆ.2 ஆன எழுத்து மூலமான புகாரினை கொடுத்துள்ளார். அதனை பெற்று, அதனடிப்படையில், மேற்படி

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:10 +0530

உதவி ஆய்வாளரே கீழ்வேளூர் காவல் நிலைய குற்ற எண்.1036/2021 இதச பிரிவுகள் 294(b), 506(ii) மற்றும் u/s. 25 (1) (A) of Arms Act, 1959 ன் கீழ் அசாஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரையும் இணைத்து, நாகப்பட்டினம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு மேற்படி உதவி ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு மேற்படி உதவி ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். ஒரு நகலை வழக்கு கோப்புடன் புலன் விசாரணைக்காக, மேற்படி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்த திரு. சோமசுந்தரம் அவர்களிடம் மேற்படி உதவி ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார்.

5 (3). வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, மேற்படி காவல் ஆய்வாளர் கடந்த 17.09.2021 ஆம் தேதி மாலை 07.00 மணியளவில், சம்பவ இடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான திரு.விவேக் மற்றும் திரு. கஸ்பர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அசாஆ.4 ஆன பார்வை மகசர், அசாஆ.5 ஆன மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (4). கடந்த 18.09.2021 ஆம் தேதி காலை 09.00 மணியளவில், கீழ்வேளூர் ரயில்வே கேட் அருகில் TN 22 CY 9840 என்ற இருசக்கர வாகனத்தில் வந்த

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:16 +0530

இவ்வழக்கின் எதிரியை காரணங்கள் கூறி, மேற்படி காவல் ஆய்வாளர் கைது செய்துள்ளார். அப்போது அங்கு வந்திருந்த சாட்சிகள் திரு. பார்த்திபன் மற்றும் திரு.கலாநிதி ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரியை விசாரித்தபோது, அவர் தன்னிச்சையாக இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி காவல் ஆய்வாளர் பதிவு செய்துகொண்டு, அதனடிப்படையில் இவ்வழக்கின் எதிரி இங்கர்சால் எடுத்து ஆஜர் செய்த சாபொ.1 ஆன அருவாள் ஒன்றை, அதே இடத்தில் வைத்து மேற்படி சாட்சிகள் முன்னிலையில், அசாஆ.6 ஆன கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்திலும், மேற்படி கைப்பற்றுதல் மகசரிலும் மேற்படி சாட்சிகளிடம் மேற்படி காவல் ஆய்வாளர் கையொப்பம் பெற்றுள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளை மேற்படி காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5 (5). எதிரியை இந்த வழக்கு சம்பந்தமாக நீதிமன்ற காவலுக்கு மேற்படி காவல் ஆய்வாளர் அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை அசாஆ.7 ஆன படிவம் 91ன் மூலம் மேற்படி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மேற்படி காவல் ஆய்வாளர் ஆஜர் செய்துள்ளார்.

5 (6). இவ்வழக்கின் சட்டப் பிரிவுகளை இதச பிரிவுகள் 294(b), 506(ii) மற்றும் u/s. 25 (1) (A) of Arms Act, 1959 ல் இருந்து, இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s. 25 (1) (A) of Arms Act, 1959 ஆக மாற்றம் செய்து கடந்த 29.09.2021 ஆம் தேதி அசாஆ.8

ஆன சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளர் தயார் செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்து மேற்படி காவல் ஆய்வாளரே, இவ்வழக்கின் எதிரி மீது குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

5 (7). அசா.2 திரு. இரணியன் தற்போது கீழ்வேளூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார். இவ்வழக்கு சம்பந்தமாக மேற்படி உதவி ஆய்வாளர் திரு. அசோக்குமார் புகாரினை பெற்று, இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்பந்தமாகவும், காவல் ஆய்வாளர் திரு. சோமசுந்தரம் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டது சம்பந்தமாகவும், ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளிக்க குவிமுச.பிரிவு 311ன் கீழான மனுவின் பேரில் அசா.2 டினை அரசுத்தரப்பில் அழைத்ததால், அவர் ஆஜராகி ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளித்துள்ளார்.

5 (8). இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகவும், அசாஆ.2 ஆன புகாரினை கொடுத்ததாகவும் சொல்லி, அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 திரு. ஸ்டாலினுக்கு இவ்வழக்கின் எதிரி அவரின் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் தெரியும். ஏற்கனவே, அசா.1 றிடமும், அவரது அப்பாவிடமும், இவ்வழக்கின் எதிரி பிரச்சனை செய்தது சம்பந்தமாக அசா.1ம், அவரது அப்பாவும் கீழ்வேளூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்துள்ளார்கள். அதிலும் அவர்களுக்குள் சமரசமாகிவிட்டது. அதன்பின்னிட்டு இவ்வழக்கின் எதிரிக்கும், அசா.1 மற்றும் அவரது அப்பாவிற்கும் எந்தவித பிரச்சனையும் இல்லை. இருந்தபோதும்,

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:30 +0530

ஏற்கனவே அவர்கள் கொடுத்த புகார் சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு வர சொல்லி அசா.1 றிடம், அசாஆ.2 ஆன புகாரில் உள்ள கையெழுத்தை வாங்கியுள்ளார்கள். அதில் என்ன எழுதியிருந்தார்கள் ? என்று அசா.1 க்கு தெரியாது. போலிசார் எதுவும் அசா.1 றை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை. மேற்சொல்லப்பட்டவாறு, அசா.1 அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததால், அசா.1 றை அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக அனுமதிக்கக் கோரப்பட்டது. அவ்வாறே அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், அசா.1 றினை அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.

6. இத்துடன் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளில், இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அளிக்கப்பட்ட, சாட்சிகளின் சாட்சியங்கள் குறித்து, இன்று 24.06.2026 ஆம் தேதி குவிமுச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ், இவ்வழக்கு எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அப்போது இவ்வழக்கு எதிரி **"தனக்கு எதிராக கூறப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் பொய், திருட்டு வழக்கிற்காக என்னை காவல் நிலையம் அழைத்துச் சென்று 3 நாட்கள் சட்டமுரணான காவலில் வைத்திருந்தனர். அதன்பின்னர் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி இந்த பொய் வழக்கை போட்டார்கள். தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை"** என தெரிவித்தார். எனவே எதிரி தரப்பு சாட்சிய விசாரணை இல்லையென முடிக்கப்பட்டது. எதிரி தரப்பில் எந்தவித சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:36 +0530

பொருள்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. பின்னர் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, சாட்சிய, சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தற்போது தீர்வுக்குரிய விபரம் யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**8. <u>தீர்வு :-</u>**

8 (1). இவ்வழக்கின் எதிரி ஏற்கனவே அசா.1 றின் அப்பா அவருக்கு எதிராக புகார் கொடுத்ததை மனதில் வைத்துக்கொண்டு, கடந்த 17.09.2021 ஆம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில், அசா.1 றுடன் கலகம் செய்ய வேண்டும் என்ற குற்றமுறு எண்ணத்தில், அவரை மேற்கொண்டு செல்லவிடாமல் தடுத்து நிறுத்தினார். அசா.1 றை பொது இடத்தில் வைத்து, பிறர் அருவருக்கும்படியான காமக்குரோதமான வார்த்தைகளால் பேசினார். சாபொ.1 ஆன அருவாளைப் பயன்படுத்தி அசா.1 க்கு கொலை மிரட்டல்விடுத்தார். எனவே, இவ்வழக்கின் எதிரி, இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s. 25 (1) (A) of Arms Act, 1959 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என அரசுத்தரப்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:42 +0530

8 (2). எதிரி தரப்பில் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல இவ்வழக்கு சம்பவமே நடைபெறவில்லை. திருட்டு வழக்கு சம்பந்தமாக விசாரணைக்காக இவ்வழக்கு எதிரியை கீழ்வேளூர் காவல் நிலையம் அழைத்துச் சென்று சட்ட முரணான காவலில் வைத்திருந்தனர். பின்னர் எதிரியை விட்டால் அவர் ஏதேனும் பிரச்சனை செய்வார் என கருதி, ஏற்கனவே அசா.1 றின் அப்பா எதிரி மீது புகார் கொடுத்திருந்ததால், அசா.1 றினை நிலையம் வரவழைத்து அசாஆ.2 ஆன புகார் ஆவணத்தில் உள்ள அசாஆ.1 ஆன கையெழுத்தினை அசா.1 றிடம் வாங்கியுள்ளனர். அதை வைத்து நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி, மேற்படி காவல் நிலையத்தாரே அசாஆ.2 ஆன புகாரினை தயார் செய்து, இந்த வழக்கினை எதிரிக்கு எதிராக தவறாக போட்டுள்ளனர். அதனால்தான் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 றே, இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்பது போல் இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளார். எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, இவ்வழக்கில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் எந்தவித சாட்சிகளையும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால், எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

8 (3). எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, அரசுத்தரப்பில் மொத்தம் 2 சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதில்

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.24 18:56:49 +0530

அரசுத்தரப்பு வழக்குப்படி, அசா.1 இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் மற்றும் அசாஆ.2 ஆன எழுத்துமூலமான புகாரினை கொடுத்தவர். அசா.2, கீழ்வேளூர் காவல் நிலையத்தின் தற்போதைய காவல் உதவி ஆய்வாளர். மேற்படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. அசோக்குமார் இவ்வழக்கின் புகாரினைப் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது சம்பந்தமாகவும், மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் திரு. சோமசுந்தரம் இவ்வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டது சம்பந்தமாகவும், ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளிக்க குவிமுச.பிரிவு 311ன் கீழான மனுவின் பேரில், அரசுத்தரப்பில் அசா.2 டினை அழைத்து விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவர் மூலம் அசாஆ.2 முதல் 8 வரையிலான சான்றாவணங்களும், சாபொ.1 ஆன வழக்குச்சொத்தும் அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8 (4). எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க, இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாகவும், அசாஆ.2 ஆன எழுத்து மூலமான இவ்வழக்கின் புகாரினை கொடுத்ததாகவும் சொல்லி, அசா.1 றினை அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட அசா.1 றே, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கின் குற்ற சம்பவம் நடைபெற்றது என்றும், அதுசம்பந்தமாக இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக நான்தான், அசாஆ.2 ஆன எழுத்து மூலமான புகாரினை கொடுத்தேன் என்றும், அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவில்லை. மாறாக, **"இவ்வழக்கின் எதிரி எங்கள் ஊர் என்பதால் அவரை**

G KRISHNAN
Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:56:56 +0530

**எனக்கு தெரியும். ஏற்கனவே, என்னிடமும், என் அப்பாவிடமும், இவ்வழக்கின் எதிரி பிரச்சனை செய்தது சம்பந்தமாக நாங்கள் கீழ்வேளூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். அதிலும் எங்களுக்குள் சமரசமாகிவிட்டது. அதன்பின்னிட்டு, இவ்வழக்கு எதிரிக்கும், எங்களுக்கும் எந்தவித பிரச்சனையும் இல்லை. இருந்தபோதும், ஏற்னவே நாங்கள் கொடுத்த புகார் சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு வரசொல்லி என்னிடம் தற்போது காட்டப்படும் அசாஆ.2 ஆன புகாரில் உள்ள அசாஆ.1 ஆன கையெழுத்தினை வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தார்கள் ? என்று எனக்கு தெரியாது. அதில் உள்ள விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை எதுவும் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை"** என அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

8 (5). இந்நிலையில், அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்த கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளை முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல, இவ்வழக்கு எதிரியை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதையும், அதனடிப்படையில், சாபொ.1 ஆன வழக்குச்சொத்து காவல் ஆய்வாளர் திரு. சோமசுந்தரம் அவர்களால் கைப்பற்றப்பட்டது என்பதையும் உறுதிப்படுத்த, எந்தவித சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டார் என்பதை உறுதிப்படுத்தவும், பார்வை மகசர் சாட்சியங்கள் உள்ளிட்ட,

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:57:02 +0530

எந்தவித சாட்சிகளையும் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை. குறைந்தபட்சம் இவ்வழக்கின் புகாரினைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்படும் உதவி ஆய்வாளரையோ, இவ்வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டதாக சொல்லப்படும் காவல் ஆய்வாளரையோ அரசுத்தரப்பில் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்படவில்லை.

8 (6). அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தி விசாரணை செய்யப்பட்ட, அசா.2 ஆன உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர் அல்லார். அதேபோல அவர் இவ்வழக்கின் புலன் விசாரணையை மேற்கொண்டவரும் அல்லார். அவர் இவ்வழக்கு ஆவணங்களைப் பார்த்து, உதவி ஆய்வாளர் திரு. அசோக்குமார் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாக சொல்லப்படுவது சம்பந்தமாகவும், காவல் ஆய்வாளர் திரு. சோமசுந்தரம் வழக்கு புலன் விசாரணையை மேற்கொண்டதாக சொல்லப்படுவது சம்பந்தமாகவும், ஆவணங்களைப் பார்த்து சாட்சியமளித்தவர் ஆவார். மேற்கண்ட சூழ்நிலையில், அசா.2 டின் சாட்சியம், அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் ஆகியவைகளை மட்டும் வைத்து எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசுத்தரப்பில் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டது என்று கூற இயலாது.

8 (7). மேற்கண்ட அசா.1 றின் சாட்சியம், அரசுத்தரப்பு செயல்பாடு, அரசுத்தரப்பு சான்றாவணங்கள், சான்று பொருள் மற்றும் எதிரி தரப்பு வாதுரை ஆகியவைகளை

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.24 18:57:09 +0530

பார்க்கின்றபோது, அரசுத்தரப்பில் சொல்லப்பட்டதுபோல இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதா ? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**9. முடிவில்,**

**எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களானது, அரசு தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்பட்டிருப்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, இவ்வழக்கின் எதிரியை, இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரியை இதச பிரிவுகள் 341, 294(b), 506(ii) மற்றும் u/s.25 (1) (A) of Indian Arms Act, 1959 ன் கீழான குற்றச்சாட்டுக்களில் இருந்து, கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**10.** எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணையப்பத்திரமானது மேல்முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் தானே ரத்தாகும் என இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**11. இவ்வழக்கு சம்பந்தமாக நாகப்பட்டினம், நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றத்தில் CP.No.235/2021 ஆக ஆஜர் செய்யப்பட்டு, தற்பொழுது இந்த**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.06.24 18:57:16 +0530

**நீதிமன்றத்தில் CP.No.22/2025 ஆக எண்ணிடப்பட்ட சாபொ.1 ஆன சுமார் 60 செ.மீ. நீளமுள்ள ஆருவாள் ஒன்றை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் பயனற்றது என கருதி அழிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.24 18:57:22 +0530
**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**

**இணைப்பு** -

**சாட்சியப்பட்டியல்**

**அரசு தரப்பு சாட்சிகள்** :-

| **வ.எண்.** | **சாட்சிகளின் பெயர்** |
|---|---|
| அ.சா.1 | திரு. ஸ்டாலின் |
| அ.சா.2 | திரு. இரணியன் (காவல் உதவி ஆய்வாளர்) |

**எதிரி தரப்பு சாட்சிகள் :**- இல்லை.

**<u>சான்றாவணப்பட்டியல்:</u>**

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | -- | புகாரில் உள்ள அசா.1 றின் கையெழுத்து மட்டும் - அசல் |
| அ.சா.ஆ.2 | -- | புகார் - அசல். |
| அ.சா.ஆ.3 | 17.09.2021 | முதல் தகவல் அறிக்கை - அசல் |
| அ.சா.ஆ.4 | 17.09.2021 | பார்வை மகசர் - அசல் |
| அ.சா.ஆ.5 | 17.09.2021 | மாதிரி வரைபடம் - அசல். |
| அ.சா.ஆ.6 | 18.09.2021 | கைப்பற்றுதல் மகசர் - நகல். |
| அ.சா.ஆ.7 | 18.09.2021 | படிவம் 91 - அசல் |
| அ.சா.ஆ.8 | 29.09.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை - அசல். |

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-</u>** -இல்லை.

**<u>சான்றுப்பொருள் பட்டியல் :</u>**

**<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:-</u>**

சாபொ.1 சுமார் 10 செ.மீ. மரக்கைப்பிடி, சுமார் 2.5 செ.மீ. இரும்பு பூண், சுமார் 47-1/2 செ.மீ. நீளமுள்ள இரும்பு பூண், மொத்தம் சுமார் 60 செ.மீ. நீளமுள்ள அருவாள் - ஒன்று.

**<u>எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-</u>** இல்லை.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.24 18:57:29 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**

**<u>குறிப்பு</u>**

1 எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.

2 சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3 எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து விடுதலை செய்யப்பட்டது.

4 தீர்ப்பு பற்றி சிறு குறிப்பு குற்ற முறையீட்டு காவல் நிலையத்தாருக்கு தெரிவிக்கப்பட்டது.

5 தீர்ப்பின் நகல் மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

6 எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

7 தீர்ப்பு நாள்.24.06.2026.

G KRISHNAN Digitally signed by G KRISHNAN Date: 2026.06.24 18:57:36 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**(தலைமை நீதித்துறை நடுவர்),**

**நாகப்பட்டினம்.**